*24*

# மனந்திரும்பாத நகரங்கள்

# (11:20-24)

*சுவிசேஷப் புத்தகங்கள் கோராசின், பெத்சாயிதா மற்றும் கப்பர்நகூம் ஆகிய ஊர்களில் இயேசு செய்த ஊழியங்கள் மற்றும் அவர் நிகழ்த்திய அற்புதங்கள் ஆகியவற்றைப் பற்றிய பதிவை உள்ளடக்குவதில்லை (காண்க யோவான் 21:25). இந்த நகரங்களுக்கு விலைமதிப்பற்ற சிலவிஷயங்கள் வழங்கப்பட்டன, ஆனால் அவைகள் அதை முற்றிலுமாக மதிக்காது விட்டுவிட்டன.*

## இரண்டு நகரங்களுக்கு இரண்டு *சாபங்கள் (11:20-22)*

**[20]அப்பொழுது, தமது பலத்த செய்கைகளில், அதிகமானவைகளைச் செய்யக் கண்ட பட்டணங்கள் மனந்திரும்பாமற் போனபடியினால் அவைகளை அவர் கடிந்துகொள்ளத் தொடங்கினார். [21]கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால்,**
**[22]அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்.**

**வசனம் 20. மனந்திரும்ப** மறுத்து விட்டவர்களிடத்தில் பேசுகையில் இயேசு, மிகவும் அதிகம் குறிப்பிட்ட வகையில் உரைக்கலானார். அவர் தமது மீது தமது **பலத்த செய்கைகளில், அதிகமானவைகளைச் செய்யக் கண்ட பட்டணங்கள்** மீது தமது கவனத்தைத் திருப்பினார்: கோராசின், பெத்சாயிதா மற்றும் கப்பர்நகூம். "பலத்த செய்கைகள்" என்பதற்கான (*dunamis*) கிரேக்க வார்த்தை, அடிக்கடி "வல்லமை" என்ற மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தையாக உள்ளது. இந்த நகரங்கள் தங்கள் மத்தியில், தேவனுடைய மாபெரும் வல்லமையைக் கண்டிருந்தன, ஆனால் அவருடனான அவற்றின் உறவுமுறை மாறுபடவில்லை. இயேசுவின் பலத்த செய்கைகள், அவரது உபதேசத்தின் தெய்வீக அதிகாரத்தை நிரூபித்தன, ஆனால் அப்போதும் அதை அவர்கள் புறக்கணித்தனர். அவரின் பலத்த செய்கைகளும் போதனையும் அவர்கள் மனந்திரும்பும்படி அவர்களை அசைக்கவில்லை. ஆகவே இந்த நகரங்களைக் **கடிந்துகொள்ளத் தொடங்கினார்.**

**வசனம் 21. சாபம்** என்பதற்கான (*ouai*) கிரேக்க வார்த்தை, ஆழமான பரிதவிப்பு அல்லது கோபத்தைக் குறிக்கும் வார்த்தைகளில் ஒன்றாக உள்ளது. கிறிஸ்துவின் செய்தி புறக்கணிக்கப் பட்டதால் அவருக்கு ஏற்பட்ட வருத்தமே இங்கு இதன் வலியுறுத்தமாக உள்ளது. வில்லியம் பார்க்ளே அவர்கள்,

"பாவத்தைப் பற்றிய இயேசுவின் கடிந்துகொள்ளுதல், பரிசுத்தமான கோபமாக உள்ளது, ஆனால் கோபம் என்பது கொந்தளிக்கும் மேட்டிமையினால் அல்ல ஆனால் உடைந்துபோன இருதயத்தில் இருந்து வருவதாக உள்ளது" என்று எழுதினார்.[1]

**கோராசின்** என்பதே கர்த்தரால் பழித்துரைக்கப்பட்ட முதல் நகரமாக இருந்தது. இது கப்பர்நகூமுக்கு அருகில் இருந்த ஒரு சிறு கிராமம் என்று நினைக்கப்படுகிறது. இதன் தோற்றகால இடம் "டெல் ஹூம் (கப்பர் நகூம்) என்ற நகருக்கு வடக்கே மூன்று மைல் தொலைவில், கலிலேயாக் கடற்கரையில் இருந்து பின்னோக்கிச் செல்லும் குன்றில், கிர்பெட் கெரேஸ் என்ற இடமாக இருக்கக் சாத்தியக்கூறுள்ளது."[2] கோராசின் ஊரில் இயேசுவின் ஊழியம் பற்றி சுவிசேஷப் புத்தகங்கள் பதிவு செய்யவில்லை. அந்த ஊரில் நிகழ்த்தப்பட்டதாகக் குறிப்பான அற்புதம் எதைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருப்பதில்லை. இயேசுவின் செயல்களினுடைய மாதிரியை மாத்திரமே சுவிசேஷ விபரங்கள் பதிவு செய்துள்ளன (யோவான் 20:30; 21:25). நேர்மையான இருதயம் கொண்ட மக்கள் விசுவாசிக்கப் போதுமான எண்ணிக்கையில் அற்புதங்கள் அங்கு நிகழ்த்தப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் கிறிஸ்துவின் கூற்று மாத்திமே சுட்டிக்காண்பித்தது.

**பெத்சாயிதா** என்பது இயேசு கண்டனம் செய்த இரண்டாவது நகராக இருந்தது. இது கலிலேயாக் கடலின் வடக்குக்கரையில் இருந்த மீன்பிடிக்கிராமம் ஆகும், இந்த ஊரின் அருகில்தான் யோர்தான் நதி கடலில் கலக்கும் இடம் இருந்தது (மாற்கு 6:45; 8:22; லூக்கா 9:10). இது பேதுரு, அந்திரேயா மற்றும் பிலிப்பு ஆகியோரின் சொந்த ஊராக இருந்தது (யோவான் 1:44). பார்வையற்ற ஒரு மனிதனை கிறிஸ்து குணமாக்கியது ஒன்றுதான் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரே அற்புதமாக உள்ளது (மாற்கு 8:22-26). இருப்பினும் மற்ற குணமாக்கும் அற்புதங்களும், ஐயாயிரம் பேருக்கு உணவளித்த அற்புதமும் இந்த ஊரின் அருகில் நடைபெற்றன (லூக்கா 9:10-17). சுவிசேஷப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிராத கூடுதலான அற்புதங்கள் இந்த ஊரில் நிகழ்த்தப்பட்டிருக்க வேண்டும்.

இந்த ஊரில் நிகழ்த்தப்பட்டிருந்த **அற்புதங்கள் தீரு மற்றும் சீதோன்** ஆகிய ஊர்களில் நிகழ்த்தப்பட்டிருந்தால், **நீண்ட காலத்திற்கு முன்பே** அந்த மக்கள் **மனந்திரும்பி இருப்பார்கள்** என்று இயேசு கூறினார். தீருவும் சீதோனும் கடல்துறைமுக நகரங்களாக இருந்தன, மற்றும் அங்கு குடியிருந்த மக்கள் வர்த்தகர்களாகவும் காலனியாதிக்கக்காரர்களாகவும் அறியப்பட்டிருந்தனர். அவர்கள் பழங்காலப் பெனிக்கியர்களில் இருந்து வந்த சந்ததியார் ஆவர். பழைய ஏற்பாட்டில், தீரு சீதோன் நகரங்களில் இருந்த மக்கள் பாகால் என்ற கடவுளை ஆராதித்தனர் மற்றும் அவர்கள் தங்கள் ஒழுக்கவீனம் மற்றும் மோசமான நடக்கை ஆகியவற்றினால் அறியப்பட்டிருந்தனர். இவ்விரு நகரங்களுமே இவற்றின் பொல்லாத தீய குணத்திற்காக, தீர்க்கதரிசிகளால் கண்டனம் செய்யப்பட்டிருந்தன (ஏசாயா 23:1-18; எரேமியா 25:22; 47:4; எசேக்கியேல் 26-28; ஆமோஸ் 1:9, 10).

தீரு சீதோன் எல்லைகளில் இயேசு பயணம் செய்திருந்தார் மற்றும் அங்கு அவர் குறைந்த பட்சம் ஒரு அற்புதத்தை நிகழ்த்தியிருந்தார் (15:21-28). தீரு மத்திய தரைக்கடலின் கரையில் அமையப்பெற்ற ஊராகும், இது

கலிலேயாக் கடலில் இருந்து சுமார் இருபத்து ஐந்து மைல்கள் தொலைவிலும் எருசலேம் நகரில் இருந்து சுமார் நூறு மைல்கள் தொலைவிலும் இருந்தது. பவுல் தமது மூன்றாவது சுவிசேஷ ஊழியப் பிரயாணத்திற்குப் பின்பு எருசலேமுக்குத் திரும்பிச் செல்லும் தமது வழியில், இந்த இடத்தில் தங்கினார் (நடபடிகள் 21:3, 4). சீதோன் என்ற நகரம் இதே கடற்கரையில் சுமார் இருபது மைல்கள் தொலைவில் வடக்கில் அமைந்துள்ளது. பவுல் ரோமாபுரிக்குச் செல்லும் தமது பயணத்தில், இந்த இடத்திலும் தங்கியிருந்தார் (நடபடிகள் 27:3).

மனந்திரும்புதலைப் பற்றி இயேசு பேசியபோது, அதை அவர் இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து என்ற செயலுடன் இணைத்தார். "இரட்டு" என்பது **ஒட்டகத்தின் அல்லது வெள்ளாட்டின்** முடியைக்கொண்டு நெசவு செய்யப்பட்ட முரடான உடையாகும், இது தானியங்கள் மற்றும் இதர பொருள்களை ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டுசெல்வதற்கென்று தயாரிக்கப்பட்டது. ஏழை மக்கள் இவற்றைக் கொண்டு உடைகளைத் தயாரித்துக் கொள்வார்கள். இரட்டு உடுத்துதல் என்பதுடன், "சாம்பலில்" "உட்காருதல்" என்பது இணைவு கொண்டபோது அது, ஆழமான மனக்கசப்பு அல்லது துயரத்தின் அடையாளமாக இருந்தது (எஸ்தர் 4:1; ஏசாயா 58:5; தானியேல் 9:3; யோனா 3:6).

**வசனம் 22. தீருவும் சீதோனும்** அவ்வளவு பொல்லாத நகரங்களாக இருந்தாலும், **நியாயத்தீர்ப்புநாளிலும்** அவற்றிற்கு நேரிடுவது கொராசின் மற்றும் பெத்சாயிதா ஊர்களுக்கு ஏற்படுவதைக் காட்டிலும் **இலகுவாயிருக்கும்** என்று இயேசு கூறினார். ஏன்? இந்த இரண்டு ஊர்களில் செய்யப்பட்ட அற்புதங்களை தீரு மற்றும் சீதோன் ஊர்களில் இருந்தவர்கள் கண்டிருந்தால், அவர்கள் மனந்திரும்பி இருப்பார்கள் என்பதே அவரது மறைமுகமான கருத்தாகும். உண்மையில் லூக்காவின் பதிவேடு, சபையின் தொடக்க வரலாற்றில் இவ்விரு நகரங்களில் இருந்தும் சீஷர்கள் எழும்பியதைக் காண்பிக்கிறது (நடபடிகள் 21:3-6; 27:3; 10:15ன் மீதான விளக்கத்தைக் காணவும்).

## உயர்த்தப்பட்ட ஒரு நகரம் சபிக்கப்பட்டது (11:23, 24)

**23 வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும்.**
**24 நியாயத்தீர்ப்பு நாளிலே உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

**வசனங்கள் 23 24. கப்பர்நகூம்** என்ற ஊரானது கலிலேயாக் கடலின் வடமேற்குக் கரையில் அமைந்திருந்தது. முன்பே கவனிக்கப்பட்டபடி, இது இயேசுவின் ஊழியக்காலத்தின்போது, ஏறக்குறைய அவரது சொந்த ஊராக

*இருந்தது (காண்க 4:13; 8:5; 9:1 ஆகியவற்றின் மீதான விளக்கவுரைகள்). கர்த்தருடைய அற்புதங்களில் கணிசமான எண்ணிக்கைகள் கப்பர்நகூமில் நடைபெற்றன (8:5-17; 9:1-8, 18-26; மாற்கு 1:21-28; யோவான் 4:46-54). மத்தேயு 8 மற்றும் 9 ஆகிய அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பத்து அற்புதங்களில் ஐந்து அற்புதங்கள் அங்கு நிகழ்த்தப்பட்டன.*

*கப்பர்நகூம் ஊரானது, வளம் நிறைந்ததாக, சுயநிறைவு கொண்டதாக மற்றும் உலகத்தின் தனது இடத்தில் பாதுகாப்பு கொண்டதாக இருந்தது. அதன் சொந்த மதிப்பீட்டில் இந்த நகரானது* **வானபரியந்தம் உயர்த்தப்பட்டது***. கப்பர்நகூம் தான் உயர்த்தப்பட்டதாக உணர்ந்தாலும், அது* **பாதாளபரியந்தம்** *தாழ்த்தப்படும். பாபிலோனின் மேட்டிமை மிகுந்த அரசருக்கு எதிராக ஏசாயா உரைத்த பழிச்சொல்லில் இருந்து இந்த மொழிநடையை இயேசு எடுத்து ஆண்டிருக்கலாம்: "நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; ... என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே. ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய்" (ஏசாயா 14:13-15).*

*புதிய ஏற்பாட்டில் "பாதாளம்"* (Hades) *என்பது பழைய ஏற்பாட்டில் "பாதாளம்"* (Sheol) *என்பதைப் போன்றே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது "கல்லறை," "மரித்தவர்களின் வட்டாரம்" மற்றும் "வேதனை" என்பதைக் குறிக்கக்கூடும்.* Leon Morris *அவர்கள், heaven என்பது சாத்தியமான அளவு மிக உயர்ந்த இடத்தைக் குறித்து நிற்பது போன்றே, கீழான உலகமான Hades என்பது இங்கு, "சாத்தியமான அளவு மிகத்தாழ்ந்த இடத்தைக் குறித்து நிற்கிறது" என்று விளக்கப்படுத்தினார்.*[3] *"பரலோகத்திற்கு உயர்த்தப்படுதல்" மற்றும் "பாதாளத்திற்குக் கொண்டுபோகப்படுதல்" ஆகியவை, முதல் நூற்றாண்டில் இந்த நகரின் மிக உயர்ந்த நிலையையும் பிற்பாடு வரவிருந்த அழிவையும் ஒப்பிடுவதற்காக உருவக நடையில் பயன்படுத்தப்பட்டன.*[4]

*நாம் அறிந்துள்ள வரையில், கப்பர்நகூம் ஊரானது, மிகுந்த ஒழுக்கவீனம் அல்லது பாலுறவுப் பிறழ்வுநிலை என்ற குற்றம் சாட்டப்பட்டிருக்கவில்லை. இருந்தபோதிலும் இயேசு இதை* **சோதோமுடன்** *ஒப்பிட்டார். அந்தப் பழைய ஏற்பாட்டு நகரமானது துன்மார்க்கத்தின் பொருளாக இருந்தது (ஆதியாகமம் 19:24; உபாகமம் 32:32; ஏசாயா 1:9, 10; எரேமியா 49:18; புலம்பல் 4:6; எசேக்கியேல் 16:48; மத்தேயு 10:15; 2 பேதுரு 2:6).* "Sodomy" *மற்றும்* "sodomite" *என்ற வார்த்தைகள் அந்தப் பாவத்தையும் அதைச் செய்பவரையும் குறிப்பிடும் அளவுக்கு அந்த நகரில் ஓரினச்சேர்க்கையின் பாவம் மிகவும் அதிகமாயிருந்தது.*

*சோதோமின் நிலைமையைக் காட்டிலும் கப்பர்நகூமின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது.* **கப்பர்நகூமில்** *செய்யப்பட்ட பலத்த செய்கைகள்* **சோதோமில்** *செய்யப்பட்டிருந்தால், அந்த நகரம் அழிவுக்குத் தப்பியிருக்கக் கூடும். இந்தக் காரணத்தினால் இயேசு, கோராசின் மற்றும் பெத்சாயிதாவுக்கு உரைத்த உரையின் சாராம்சத்தைக் கப்பர்நகூமுக்குத் திரும்ப உரைத்தார்:* **நியாயத்தீர்ப்புநாளிலே உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்** *(10:15; 11:22 ஆகியவற்றின் மீதான விளக்கங்களைக் காணவும்).*

## ✧✧✧✧✧ பாடங்கள் ✧✧✧✧✧

# மனந்திரும்பாத நகரங்கள் (11:20-24)

*கிறிஸ்துவைப் பற்றி அறிவதற்கும் அவரைப் பின்பற்றுவதற்கும், அந்த சத்தியங்கள் மற்ற நகரங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிராத நிலையில், இன்று உலகத்தின் எத்தனை நகரங்கள் அதைக் கேட்பதற்கு மாபெரும் வாய்ப்பைப் பெற்றுள்ளன? உலகத்தின் பல இடங்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி வாயிலாக சுவிசேஷத்தைக் கேட்கும் வாய்ப்பைக் கொண்டுள்ளன. அவைகள் தங்கள் சொந்த மொழியில் வேதாகமத்தை வாசிக்கப் பெருமளவு வழிவகையைக் கொண்டுள்ளன. மேலும் அவைகள் தங்கள் நடுவில், அன்றாடம் கிறிஸ்துவின் வெளிச்சத்தைப் பிரகாசிக்க, உண்மையுள்ள கிறிஸ்தவர்களையும் கொண்டிருக்கலாம். ஒருவேளை அவைகள் தங்கள் சமூகத்தில் பேரழிவுகள் தாக்கியபின்பு, கிறிஸ்தவர்களின் தாராள குணத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கலாம். இருப்பினும், இந்த எல்லா வாய்ப்புகளும் இருந்தும்கூட, அவைகள் கிறிஸ்துவைப் புறக்கணித்துள்ளன. இதற்கு நேர்மாறாக, பலர் இயேசுவைப் பற்றி ஒருக்காலும் கேள்விப்பட்டிராமல் மற்றும் ஒரு வேதாகமத்திற்குக் கூட வழியில்லாமல் இருக்கலாம். அவைகள் தங்கள் சமூகத்தில் சிறிதளவே கிறிஸ்தவப் பிரசன்னத்தைப் பெற்றிருக்கலாம் அல்லது அது இல்லாமல் கூட இருக்கலாம். நிச்சயமாகவே, அதிகமான வாய்ப்புகளைக் கொண்டுள்ளவர்கள் அதிகம் கடுமையாக நியாயந்தீர்க்கப்படுவார்கள்.*

டேவிட் ஸ்டீவர்ட்

# தெய்வீக முரண் உரை (11:23)

*கிறிஸ்துவை எதிர்ப்பவர்கள் எவ்வளவு அடிக்கடி வாழ்வில் வெற்றிபெற்றுள்ளதாகத் தோற்றம் அளிக்கின்றனர்! ஒருவேளை அவர்கள் உயர்ந்த அதிகாரம் கொண்ட வேலைகள், பெரிய தொகையுள்ள வங்கிக் கணக்குகள் மற்றும் ஆடம்பரமான வீடுகள் ஆகியவற்றைப் பெற்றிருக்கலாம். உலகப்பிரகாரமான வசதிகள் யாவற்றிலும் அவர்கள் எல்லாவற்றையும் கொண்டுள்ளதாகத் தோன்றுகிறது. அவர்கள் "உயர்த்தப்பட்டதாக"க் காணப்படுகிறது.*

*இப்படிப்பட்ட உயர்த்தப்படுதல் உண்மை நிலையைக் காட்டிலும் அதிகம் கற்பனை செய்யப்படுகிறது என்று இயேசு எச்சரித்தார்; அது குறுகிய வாழ்நாள் கொண்டதாக மாத்திரம் உள்ளது. "பதிவு செய்யப்பட்ட அவரது அற்புதங்களில் அதிகமானவற்றை அவர் நிகழ்த்திய நகரங்களை அவர் சபித்தார், ஏனெனில் அங்கிருந்த மக்கள் மனந்திரும்பவில்லை. அவர், வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்" என்று கூறினார் (11:23). அவர்களின் மகிமை முடிவுக்கு வரும் ஏனெனில் அவர்கள் மீட்பரிடம் திரும்பவில்லை.*

*தெய்வீக முரண் உரையானது சுவிசேஷப் புத்தகங்களில் இயேசுவினால் பலமுறை திரும்பத் திரும்ப உரைக்கப்பட்டுள்ளது: "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (23:12; காண்க லூக்கா 14:11; 18:14).*

டேவிட் ஸ்டீவர்ட்

குறிப்புகள்

[1]William Barclay, *The Gospel of Matthew,* vol. 2, 2d ed., The Daily Study Bible (Philadelphia: Westminster Press, 1958), 13. [2]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 164. [3]Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 290. [4]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 101.